உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.583/2023

பெயர் : பாலமுருகன்(அ.சா.4)

தகப்பனார் பெயர் :பெரியைய்யா

கணவர் பெயர் :

வயது :33

கிராமம் :பூதமங்கலம்

வட்டம் :மேலூர்

தொழில் :JCB டிரைவர்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

22.11.2024

முதல் விசாரணை:

நான் பூதமங்கலத்தில் குடியிருக்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் 2வது எதிரி அருணாச்சலத்தினுடைய அண்ணன் மகள் நதியாவை எனக்கு தெரியும். நதியா கோட்டநத்தாம்பட்டியில் திருமணம் முடித்து, குடியிருந்து வருகிறார். ஆஜர் 2வது எதிரியை ஊரில் தங்கையா என்று அழைப்பார்கள். ஆஜர் எதிரிகளுக்கும், நதியாவுக்கும் இடையே நிலத்தகராறு இருந்து வந்தது. கடந்த 2021ம் ஆண்டு இடம் சம்பந்தமாக பிரச்சினை இருந்து வந்ததால் நதியா, கோட்டநத்தாம்பட்டியில் இருந்து பூதமங்கலத்திற்கு ஆஜர் எதிரிகளிடம் இடப்பிரச்சினை சம்பந்தமாக கேட்க வந்துள்ளார். இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. 1ம் எதிரி பூமாதேவி, நதியா மீது காய வைத்த எண்ணெயை ஊற்றிவிட்டார். நான் சுமார் 50 மீட்டர் தொலைவில் இருந்ததால் நேரடியாக சம்பவத்தை பார்த்தேன். மதியம் சுமார் 12-12.30 மணியளவில் சம்பவம் நடந்தது. நதியாவிற்கு முதுகிலும், வலது

தோள்பட்டையிலும் பலத்த காயம் ஏற்பட்டது. அவர் வலியால் கதறிக்கொண்டிருந்தார். உடனே ஆம்புலன்சுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். காவலர்கள் என்னை விசாரித்தார்கள் நடந்ததை கூறினேன்.

குறுக்கு விசாரணை : வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

SAMUNDESWARIPRABHA
Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2024.11.22 18:10:38 +0530

Assistant Sessions Judge
Melur